2. அறிவிப்பு

19-4-1995 அன்று நடைபெற்ற எண்ணிக்கணிக்கும் வாக்கெடுப்பில் நியமன உறுப்பினர் டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா அளித்த வாக்கு சேர்த்துக் கொள்ளப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 19-4-1995 ஆம் நாளன்று எண்ணிக் கணிக்கும் முறைப்படி இங்கு வாக்கெடுப்பு நடைபெற்றபோது, பேரவையின் நியமன உறுப்பினர் டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை என்று அறிவித்திருந்தேன். ஆனால், விதிமுறைகளையும், கடந்தகால நேர்வுகளையும் எடுத்துப் பார்த்தபோது, இங்கு எழுப்பப்படும் பிரச்சினைகளில் அல்லது இங்கு கொண்டுவரப்படும் தீர்மானங்களில் அவருக்கு வாக்களிக்க உரிமை இருந்து வந்துள்ளது. அவைக்கு வெளியே ராஜ்யசபைத் தேர்தல் போன்ற தேர்தல்களில்தான் அவருக்கு வாக்களிக்கிற உரிமை இல்லை என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, அன்றையதினம் அவருக்கு வாக்களிக்க உரிமை இருந்தது. ஆகவே, அன்று அவர் அளித்த வாக்கைச் சேர்த்து, அன்றையதினம் எண்ணிக் கணிக்கும் முறையில், நான் அறிவித்த அந்த அறிவிப்பில் அந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு

(அ) புதுக்கோட்டை மாவட்டம் கீரனூர் அரசு மருத்துவமனையில் குளிர்சாதனப் பெட்டி வசதி செய்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. குழந்தைவேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அரசு மருத்துவமனையில் குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லாததால் நோயாளிகட்கு ஏற்பட்டுள்ள இன்னல் குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

கீரனூர் அரசு மருத்துவமனையில் தற்பொழுது குளிர்சாதனப் பெட்டி வசதி இல்லை. இம்மருத்துவமனைக்கு தேவையான ஒரு குளிர்சாதனப் பெட்டி 1995-96 நிதியாண்டில் வாங்கித் தரப்படும்.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, புரட்சித் தலைவி அவர்களுடைய இரும்புக் கோட்டை, எப்போதும் புரட்சித் தலைவியின் பக்கம்தான் புதுக்கோட்டை மாவட்ட மக்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபித்து வரும் வகையில், புதுக்கோட்டை மாவட்ட மக்களுக்கு இரண்டு முறை நலத்திட்டங்களை வழங்கிய புரட்சித் தலைவியின் நல்லாட்சியில், எனது குளத்தூர் தொகுதியிலுள்ள கீரனூர் அரசு மருத்துவமனைக்கு, 1995-96 ஆம் நிதி ஆண்டில், குளிர்சாதனப் பெட்டி வாங்கித் தரப்படும் என்று கூறியதற்கு என் சார்பிலும், என் தொகுதி மக்களின் சார்பிலும், மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அந்த மருத்துவமனைக்கு எக்ஸ்ரே கருவி ஒன்றை வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதனப் பெட்டியைப் பொறுத்தவரையில் உண்டான கவன ஈர்ப்பு இது. எக்ஸ்ரேயைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு புதிதாக 20 மருத்துவமனைகளுக்காக இந்த நிதி ஆண்டில் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இந்த மருத்துவமனைக்கு வருமா என்று என்னால் இப்போது உத்தரவாதமாகச் சொல்ல முடியாது. எனவே, இதைப்பற்றி ஆய்வு செய்யப்படும்.

(ஆ) கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் பகுதிகளில் இரவில் மின் விநியோகம் தடைப்படுதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவர்கள், அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார், திரு. சி. இராமசுவாமி.

*திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் பகுதிகளில் கடந்த 10 நாட்களாக இரவில் மின் விநியோகம் தடைபட்டு பொது மக்கள் அவதிப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.